**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 87/2014**

**வாதி தரப்பு சாட்சி–1 வெள்ளையம்மாள் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) எனக்கு உயில் எழுதியதாக சொல்லப்படும் உயிலில் எனக்கு முழு அனுபவ பாத்தியமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் எனக்கு சொத்தை அனுபவம் செய்து கொள்ள மட்டுமே எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நல்லப்ப ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டு அவர் அவருடைய மனைவிக்கு எழுதிக்கொடுத்து பிறகு எனக்கு உயில் எழுதி வைத்தார்கள். உயிலில் நல்லப்ப ரெட்டியாருக்கும், அவரது மனைவிக்கும் பூர்வீக சொத்து என கண்டுள்ளது என்றால் சரிதான்.

2) உயிலில் சர்வே எண்.99/2 திட்டம் ஏக்.72 சென்ட் என கண்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.99/2 நல்லப்ப ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 72 சென்டில் எனக்கு 24 சென்ட் உயிலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதி உள்ள சொத்து யாரிடம் உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வழக்குரையில் சர்வே எண்.99/7 என தவறுதலாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் கண்டுள்ள சொத்து 99/2 அல்ல, 99/7 தான் என குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.99/7 நிலத்தை எனக்கு உயில் எழுதிய பின்னிட்டு நல்லப்ப ரெட்டியார் 4ம் பிரதிவாதி தங்கவேல் என்பவருக்கு 21.01.1988 ம் தேதியில் விற்றுவிற்றார் என்றால் சரியல்ல.

3) நல்லப்ப ரெட்டியார் நல்ல மன நிலையில் இருந்த போது சொத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்று விட்டதால் உயில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நல்லப்ப ரெட்டியார் சொத்தை விற்று விட்டதால் இந்த வழக்கிற்கான வழக்கு மூலமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நல்லப்ப ரெட்டியார் சர்வே எண்.99/7ல் 55 சென்டில் 25 செண்ட் நிலத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) 4ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்று அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தாவா சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்களை தன் பெயருக்கு மாற்றி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. எனவே சட்டப்படி இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**